

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், அண்ணா நகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் உடலுக்கு நேற்று சென்னை அமைந்தகரையில் உள்ள அவரது இல்லத்தில் மலர்மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர்கள் ந.இராமலிங்கம், ச.பரமசிவம் ஆகியோர் உள்ளனர்.

கொள்கையில் உறுதியையும் - களப்பணியையும் - அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக்காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, நவ.1-

அண்ணாநகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சோ.மா.இராமச்சந்திரன் (வயது 101) அவர்கள் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

அச்செய்தியில் கழகத் தலைவர் அவர்கள், கொள்கையில் உறுதியையும், களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக் காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு: -

நூறாண்டுகளைக் கடந்து வாழ்ந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் மறைவெய்திய செய்தி மிகுந்த



துயரமளிக்கிறது.

எளிய தேநீர்க் கடை நடத்தி, தமது கடின உழைப்பால் உயர்ந்து, திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்தவர். மிசா சிறைவாசம் கண்டவர். 30 ஆண்டுகள் பகுதிச் செயலாளராகவும், ஒருமுறை அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். கொள்கையில் உறுதியையும் களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக்காட்டியவர். அவரது நெடிய கழகப் பணியைப் போற்றும் வகையில், கடந்த ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் அவருக்குக் கலைஞர் விருது வழங்கிச் சிறப்பித்தோம்.

கடந்த ஆண்டு அவரது இல்லத்திற்கே நேரில் சென்று, நூறாவது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தபோது அவர் காட்டிய அன்பும் மகிழ்ச்சியும் இன்றும் என் நெஞ்சில் நிறைந்திருக்கின்றன.

கழகத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த அவரது நெடிய பொதுவாழ்வு இன்று நிறைவுற்றிருக்கிறது. அவர் விட்டுச் சென்ற கொள்கைத் தடமும் தொண்டறமும் என்றும் நமக்கு வழிகாட்டும்!

சோ.மா.இராமச்சந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் த.வெ.க. அரசைக் கண்டித்து சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் அருகில் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தலைமையில் மாநில மகளிர் பிரச்சாரக் குழுச் செயலாளர் ஜெசி பொன்ராணி, வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி தொண்டரணி அணி அமைப்பாளர்கள் கவிதா தேவி, ராமலட்சுமி, தெற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி தொண்டரணி அணி அமைப்பாளர்கள் சாரதா பொன் இசக்கி, தயாநிதி ஆகியோர் முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வேலூர் அண்ணா கலையரங்கம் அருகாமையில், தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில், கையாலாகாத த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் கண்டன உரையுடன், தலைமை கழகப் பிரதிநிதி, டாக்டர் மாலதி அவர்களுடன் தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் நடைபெற்றது, இதில் மாவட்ட மகளிர் துணை செயலாளர், மாநில மகளிரணி பிரச்சாரக் குழு செயலாளர், மாநகராட்சி மேயர்சுஜாதா,மாநில மருத்துவ அணி துணை செயலாளர், மாநகர கழக மகளிர் துணை செயலாளர், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்க் கழக மகளிர் அணி,மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

த.வெ.க. அரசின் சட்டம் – ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் – குழந்தைகள் பாதுகாப்பின்மை - விலைவாசி உயர்வைக் கண்டித்து

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!


மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன் கண்டன உரை!

கன்னியாகுமரி, நவ. 1 - தமிழ்நாட்டில் தற்பொழுது நிலவும் ரீல்ஸ் ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சீர்கேடு, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு போன்றவற்றால் பொது மக்கள் தினந்தோறும் அவதிப்படும் நிலைமையை உண்டாக்கிய த.வெ.க. அரசைக் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (31.10.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெனஸ் மைக்கேல் தலைமையில், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் லதா கலைவாணன் முன்னிலையில் நடைபெற்றது.

மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன் கலந்து கொண்டு த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினார்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கண்டன உரையாற்றி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து மகளிர் அணி நிர்வாகிகளுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், மகளிருக்கும், பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத் திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழகச் செயலாளர்கள், மாவட்ட, நாகர்கோவில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மகளிர் அணி உறுப்பினர்கள், மகளிர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்தனர்.



மதுரை மாவட்டம், ஒத்தக்கடை ராஜகம்பீரத்தில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் அய்யணன் அம்பலம் அவர்களின் 28வது ஆண்டு குருபூஜை மற்றும் 103வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரின் மணிமண்டபத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி, ஒன்றியச் செயலாளர் அ.பா.ரகுபதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசன், முன்னாள் ஒன்றிய துணை சேர்மன் பாலாண்டி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் அண்ணாமலை, வடக்கு மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் மகுடபதி, கழக நிர்வாகிகள் நேரு பாண்டியன், சிறைச்செல்வன், மருதுபாண்டியன், பெ.சசிக்குமார், வீரராகவன், வாடிப்பட்டி பால்பாண்டியன், முகமது யாசின், ஆனந்த், சீமான் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம், சேர்ந்தமரம் கிளைச் செயலாளர் பி.முருகன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :31.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு!

காரைக்குடி போக்குவரத்துக் கழக தொ.மு.ச நிர்வாகிகளான எம்.பச்சமால் மற்றும் வி.முருகன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :31.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.